15th November 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பிற்போக்கு நிலைமை பற்றி போட்டி வேண்டியதில்லை. ராமநாதபுரம் மாவட்டத்தை எடுத்துக்கொள்ளுவது என்று சொன்னால் மற்ற மாவட்டங்களை எடுத்துக்கொள்ளுவது இல்லை என்பது அல்ல. ஒவ்வொரு மாவட்டத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும். வட ஆற்காடு மாவட்ட சர்வேபற்றி என்னிடம் தகவல் இல்லை.

SRI P. S. CHINNADURAI : பொருளாதாரத்துறையில் மிகவும் பின் அடைந்த பல்லடம், தாராபுரம் பகுதிகளை ராமநாதபுரம் ஜில்லாப் பகுதிகளைப் போல கவனித்து தொழில் துறையில் முன்னேற்றம் காண்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பல்லடம் தாலூகாவில் தொழில் இருக்கிறது. திருப்பூர்கூட பல்லடம் தாலூகாவில் தான். ஜில்லாவை அடிப்படையாக வைத்துக்கொண்டிருக்கிறோம். தாலூகா அடிப்படையில் செய்தால் இதையெல்லாம் கவனிக்கலாம்.

SRI R. CHIDAMBARA BHARATHI : ராமநாதபுரம் ஜில்லா தொழில் துறையில் மிகவும் பிற்போக்காக இருக்கிறது என்று தேர்ந்தெடுத்து அபிவிருத்தி செய்ய முயற்சித்ததில் போதுமான அபிவிருத்தி ஏற்படவில்லை என்று ஜில்லா மக்கள் உணருகிறார்கள் என்பதை அரசாங்கம் உணர்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நந்தன் சரித்திர கதை சொல்வது மாதிரி இன்றைக்கு விதை போட்டு நாளைக்கு கதிர் வரவேண்டுமென்று எதிர்பார்த்தால் அது நடக்காத காரியம்.

SRI K. VINAYAKAM : While the hon. Member who put the main question has no objection to admit the fact that the Ramanathapuram district is backward when compared to the Thanjavur district and that priority should be given to that district, would the Government consider the possibility of investigating the Industrial potentialities of the Thanjavur district also?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Certainly. even in the Thanjavur district some industries are being organized. A licence has been given for a spinning mill in the Thanjavur district although, in spite of the best offorts of the Agriculture Department, ryots are not keen on frowing cotton. All areas that are comparitively backward are being taken up for consideration.

*Co-operative workshops*

* 2098 Q.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the details of co-operative workshops to be opened during the Third Plan period; and

(b) the number to be located in each district?

[15th November 1961

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) : Schemes for implementation during 1961–62 alone have been finalised. A statement [a] showing the details of these schemes is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், மேஜை பேரில் வைக்கப்பட்டிருக்கிற ஸ்டேட்மெண்ட்டில் 5 ஜில்லாக்கள் தான் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. மற்ற ஜில்லாக்களின் நிலைமை என்ன? அந்த ஜில்லாக்களின் அபிவிருத்தியிலே கவனம் செலுத்த வேண்டுமென்பதில் அபிப்பிராயம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஐந்து மாவட்டங்களைக் குறிப்பிட்டிருக்கிறதால் மற்ற மாவட்டங்களை எடுத்துக் கொள்வதில்லை என்பது அல்ல.

*Cardboard industry*

*2099 Q.—SRI K. VINAYAKAM (on behalf of SRI N. R. THIAGARAJAN): கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் ராஜ்யத்தில் எங்கெங்கு அட்டைகள் செய்யப்படுகின்றன?

(இ) அதற்குரிய மூலப் பொருள் என்ன?

(உ) அட்டைகள் செய்யும் கம்பெனியின் பெயர் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) No firm is now manufacturing card board on a large-scale basis in Madras State.

(இ) Card board can be manufactured from a variety of cellulosic raw materials, such as paddy straw, grass, reeds, waste paper and rags.

(உ) In view of the answer to clause (அ) above, the question does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார் இதுபோன்ற அட்டைகளை தோலிலிருந்து எடுக்கக்கூடிய ஜவ்விலிருந்து செய்யும் அளவுக்கு கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா? அது மூலமாகவும் அட்டை செய்ய ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. Cotton waste, bagasse waste paper, bamboo ஆகியவைகளை வைத்துச் செய்வது என்பதுதான் ப்ரொபோஸல். சேலம் ஜில்லாவில்கூட ஒரு கிராமத்தில் செய்ய லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது, 3,000 டன் உற்பத்தி செய்ய.

[a] Printed as Appendix III on page 642 infra.